**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 56 of 2021**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : முத்துச்சாமி** | **Father/Husband's Name : தேவனன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.05.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கஞ்சநாயக்கன்பட்டியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 06.02.2016ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் எங்கள் ஊர்ப்பக்கம் உள்ள குதிரைக்காரர் தோட்டம் வழியாக ஆயக்குடிக்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அங்கு கருப்பணகவுண்டரும், ஆஜர் எதிரியும் வாய்த்தகராறு செய்து கொண்டிருந்தார்கள். நான் என்னவென்று கேட்டபோது நான் தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். அதில் எனக்கு இடது பக்க தலையில் காயம் ஏற்பட்டது. பின்னர் நான் பழனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 06.12.2016ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் குதிரைக்காரர் தோட்டம் வழியாக ஆயக்குடிக்கு சென்று கொண்டிருந்தபோது அங்கு கருப்பண கவுண்டனும், எதிரி ஈஸ்வரனும் சண்டையிட்டு கொண்டார்கள் எனவும், நான் என்னவென்று கேட்க சென்றபோது ஈஸ்வரன் என்னை நீ யார்டா தேவிடியா பயலே

என்னை கேட்பதற்கு என கையில் வைத்திருந்த கொடுவாளால் இடது தலையில் வெட்டிவிட்டார் எனவும், நான் வலி பொறுக்க முடியாமல் சத்தம்போடவே அக்கம்பக்கத்தினர் வருவதை பார்த்த எதிரி ஈஸ்வரன் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பி சென்றுவிட்டார் எனவும், பின்னர் நான் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துவிட்டேன் எனவும் போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** சமாதான மனுவில் எதிரி மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. இல்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.05.06 17:44:05 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 56 of 2021**

**Deposition of Witness P.W.2**

**Name : முத்துக்குமார்** **Father/Husband's Name : கருப்பணகவுண்டர்**

**Village :** **Taluk :**

**Caste :** **Calling :**

**Religion :** **Age :**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.05.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கஞ்சநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1ஐ எனக்கு தெரியும். அவர் எனது உறவினர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 06.02.2016ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் எங்கள் ஊர்ப்பக்கம் உள்ள குதிரைக்காரர் தோட்டம் வழியாக ஆயக்குடிக்கு அ.சா.1 இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அங்கு எனது அப்பா கருப்பணகவுண்டரும், ஆஜர் எதிரியும் வாய்த்தகராறு செய்து கொண்டிருந்தார்கள். அ.சா.1 என்னவென்று கேட்டபோது அ.சா.1 தடுமாறி கீழே விழுந்துவிட்டார். அதில் அ.சா.1க்கு இடது பக்க தலையில் காயம் ஏற்பட்டது. பின்னர் அ.சா.1 பழனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தார். மேற்படி சம்பவத்தை நான் கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 06.12.2016ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் குதிரைக்காரர் தோட்டம் வழியாக ஆயக்குடிக்கு சென்று கொண்டிருந்தபோது அங்கு எனது அப்பா கருப்பண கவுண்டனும், எதிரி ஈஸ்வரனும் சண்டையிட்டு கொண்டார்கள் எனவும், அ.சா.1 என்னவென்று கேட்க சென்றபோது ஈஸ்வரன் அ.சா.1ஐ நீ யார்டா தேவிடியா பயலே என்னை கேட்பதற்கு என கையில் வைத்திருந்த கொடுவாளால் இடது

தலையில் வெட்டிவிட்டார் எனவும், அ.சா.1 வலி பொறுக்க முடியாமல் சத்தம்போடவே அக்கம்பக்கத்தினர் வருவதை பார்த்த எதிரி ஈஸ்வரன் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பி சென்றுவிட்டார் எனவும், பின்னர் அ.சா.1 பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துவிட்டார் எனவும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3. இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.05.06 17:44:13 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.